SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

ஜனவரி - 2019

# TNPSC ZERO CURRENT AFFAIRS PRELIMS

**0%** Effort | **100%** Results


www.tnpscthervupettagam.com

tnpscfeedback@shankarias.in

Available @Bookmark Store.

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy | Coimbatore | Namakkal.

# ஜனவரி - 2019

## *தமிழ்நாடு*

1. **திருவள்ளுவர் விருதுகள் - 2019:**

| விருதுகள் | விருதினைப் பெற்றவர்கள் |
|---|---|
| காமராசர் விருது | பழ நெடுமாறன் |
| பெரியார் விருது | சி.பொன்னையன் |
| கி.ஆ.பெ.விசுவநாதம் விருது | சூலூர் கலைப்பித்தன் |
| பாரதிதாசன் விருது | கவிஞர் தியாரூ |
| திரு.வி.க. விருது | டாக்டர்.கே.கணேசன் |
| பாரதியார் விருது | எம்.பாரதி சுகுமாரன் |
| பேரறிஞர் அண்ணா விருது | எம்.அய்க்கண் |
| அம்பேத்கர் விருது | சி.ராமகுரு |
| திருவள்ளுவர் விருது | எம்.ஜி.அன்வர் பாட்சா |

2. **33வது மாவட்டம்** : தமிழ்நாட்டின் 33வது புதிய மாவட்டமாக கள்ளக்குறிச்சி 2019 ஜனவரி 8 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது விழுப்புரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டுள்ளது.

3. ROADEO ரோபோ: இது சென்னை போக்குவரத்து காவலர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை புளூடூத் செயலி மூலம் போக்குவரத்து சமிக்ஞைகளுடன் ஒருங்கிணைக்கவோ அல்லது மனிதர்கள் மூலமாக இயக்கவோ முடியும்.

4. தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் உதவி இயக்குனராக மயில்சாமி அண்ணாதுரை நியமிக்கப்பட்டுள்ளார்.

5. தமிழ்நாடு அரசானது தூத்துக்குடி உள்நாட்டு விமான நிலையத்தை மாநிலத்தின் 5வது சர்வதேச விமான நிலையமாக மாற்ற முயற்சி மேற்கொண்டுவருகிறது. மற்ற 4 சர்வதேச விமான நிலையங்களாவன : சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை.

6. புதுமையான சுற்றுச்சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் தமிழக அரசானது ஸ்டார்அப் மற்றும் புத்தாக்கக் கொள்கை 2018-2023 (Start up and Innovation Policy 2018-2023)ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

7. **ஆளில்லா விமான டாக்சி** : இந்தியாவின் முதல் பறக்கும் டாக்சியானது (ஆளில்லா விமான டாக்சி) அண்ணா பல்கலைக்கழக எம்.ஐ.டியில் உள்ள தக்ஷா குழுவினரால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

8. டாக்டர்.எம்.ஜி.இராமச்சந்திரனின் 102வது பிறந்த நாள் விழாவை நினைவூட்டும் வகையில் 100 ரூபாய் மற்றும் 5 ரூபாய் மதிப்புள்ள இரண்டு நினைவு நாணயங்களை தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிச்சாமி வெளியிட்டுள்ளார்.

9. வண்ணத்துப்பூச்சி கணக்கெடுப்பு : சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் முதன்முறையாக வண்ணத்துப்பூச்சிகள் கணக்கெடுப்பானது நடைபெற்றது.

10. சென்னை பெருநகர மாநகராட்சியானது 2019 ஜனவரி மாத இறுதிக்குள் சென்னையிலுள்ள அனைத்து தெருவிளக்குகளையும் எல்.இ.டி. விளக்குகளாக மாற்ற திட்டமிட்டுள்ளது.

11. தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிச்சாமி சென்னையை இந்தியாவின் மென்பொருள் சேவைகளின் (SaaS – Software as a Service) தலைநகரமாக அறிவித்துள்ளார்.

12. சென்னையில் நடைபெற்ற குடியரசு தின அணி வகுப்பில் தமிழகத்தின் தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சகமானது முதல் பரிசை வென்றது.

13. 2019 ஜனவரி 27 அன்று பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மதுரை மாவட்டத்திலுள்ள தோப்பூரில் புதிய எய்ம்ஸ் மருத்துவமனைக்கான அடிக்கல்லினை நாட்டினார்.

14. சென்னையில் 2019 ஜனவரி 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் தமிழக அரசின் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடானது நடைபெற்றது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

# தேசம்

1. இந்திய வனப்பணியானது இந்திய வன மற்றும் பழங்குடியினர் பணி என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2. புதுச்சேரியில் 2019 மார்ச் 1-லிருந்து ஒரு முறை உபயோகப்படுத்தப்படும் நெகிழிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

3. “The Accidental Prime Minister” - என்ற திரைப்படமானது விஜய் கட்டேயால் இயக்கப்பட்ட முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களைப் பற்றி எடுக்கப்பட்ட திரைப்படமாகும். இத்திரைப்படத்தில் மன்மோகன் சிங் அவர்களின் கதாபாத்திரத்தை ஏற்று நடிகர் அனுபர் கெர் நடித்துள்ளார்.

4. **வந்தே பாரத் விரைவு இரயில்** : இந்தியாவின் அதிவேகமான மற்றும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இரயில் 18 ஆனது வந்தே பாரத் விரைவு இரயில் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

5. **சமந்தா விரைவு இரயில்** : நாக்பூரிலிருந்து பிப்ரவரி 14 முதல் சமந்தா விரைவு இரயில் என்ற புதிய இரயிலை IRCTC அறிமுகப்படுத்தவுள்ளது.

6. **ஆபரேசன் புரோக்கன் விண்டோ** : இது கேரள அரசால் சபரிமலை போராட்டத்தின் போது சட்டம் மற்றும் ஒழுங்கில் பிரச்சனை ஏற்படுத்துபவர்களை கைது செய்வதற்காக கொண்டு வரப்பட்ட திட்டமாகும்.

7. **தனித்தனியான உயர் நீதிமன்றங்கள்** : 2019 ஜனவரி 1 முதல் ஆந்திரப்பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகிய இரு மாநிலங்களுக்கென தனித்தனியான உயர்நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

   தெலுங்கானா - ஐதராபாத்
   ஆந்திரப் பிரதேசம் - அமராவதி (நீதி நகரம்)

8. உலகின் மிகப்பெரிய சூரிய ஒளி மின்சக்தித் திட்டம் : மத்திய அரசானது லே-லடாக் பகுதிகளில் உலகின் மிகப்பெரிய சூரிய ஒளி மின்சக்தித் திட்டத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

9. உத்தரகாண்ட்டில் இந்தியாவின் இரண்டாவது துலிப் மலர் தோட்டமானது அமைக்கப்பட்டுள்ளது. முதல் துலிப் மலர் தோட்டமானது ஜம்மு காஷ்மீரில் உள்ள ஸ்ரீநகரில் அமைந்துள்ளது.

10. பெண்களின் சுகாதாரம் மற்றும் உடல்நலத்தை மேம்படுத்தவும் ஊரகப் பகுதிகளிலுள்ள பெண்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும் ஒடிசா மாநில அரசானது உஜ்வாலா அணையாடைத் திட்டத்தை தொடங்கியுள்ளது.

11. **அடல் சேது** : கோவா மாநில முதல்வர் கோவாவின் மாண்டவி ஆற்றில் அடல் சேது பாலத்தை துவங்கி வைத்தார்.

12. தென்னக இரயில்வேயானது நாட்டில் தூய்மையாகவுள்ள இரயில்வேயில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

13. குஜராத்திலுள்ள அகமதாபாத்தில், உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

14. **கங்கா விரைவு வழி** : உலகின் மிக நீளமான விரைவு வழிப்பாதை (கங்கா விரைவு வழி) அமைப்பதற்கு உத்திரப்பிரதேச அரசானது அனுமதியளித்துள்ளது.

15. **பியோரங் பாலம்** : இந்தியாவின் மிகப்பெரிய, எஃகு கம்பிகளால் ஆன, ஒரு வழிப்பாதை கொண்ட தொங்கு பாலமானது அருணாச்சலப் பிரதேசத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

16. ஆயுதப்படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தின் படி (AFSPA) நாகலாந்து மாநிலமானது 2019 ஜூன் மாதம் வரை 'அச்சுறுத்தலுக்குட்பட்ட மாநிலம்' என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

17. **கௌ கல்யாண்** : உத்திர பிரதேச மாநில அரசானது பசுக்களின் நலனுக்கான மேல்வரியாக (Ess) கௌ கல்யாண் என்ற புதிய மேல்வரியை 0.5% கூடுதலாக உற்பத்திப் பொருள்களின் மேல் விதித்திருக்கிறது.

18. வனிதா மதில் (பெண்களின் சுவர்) : 2019 ஜனவரி 1 அன்று கேரளப் பெண்களால் பாலின சமத்துவம் மற்றும் பாலின வேறுபாட்டை எதிர்த்து

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

மனித சங்கிலிப் போராட்டம் நடத்தப்பட்டது. காசர்கோடு முதல் திருவனந்தபுரம் வரை 620 கி.மீ. நீளத்திற்கு நடந்த இப்போராட்டத்தில் 3 முதல் 5 மில்லியன் பெண்கள் கலந்து கொண்டனர்.

19. 2019, ஜனவரி 2 அன்று அதிகாலை 3.45 மணியளவில் பிந்து மற்றும் கனகதுர்கா என்ற இரண்டு பெண்கள் சபரிமலை கோவிலுக்குள் சென்று, 10 முதல் 50 வயதுக்குட்பட்ட சபரி மலை கோவிலில் நுழைந்த முதல் பெண் பக்தைகள் எனப் பெயரெடுத்தனர்.

20. **பி.வி.ஆர்.மோகன் ரெட்டி குழு** : 2020க்குப் பிறகு எந்தவொரு புதிய பொறியியல் கல்லூரியையும் அமைக்க அனுமதி அளிக்க வேண்டாமென்று பி.வி.ஆர் மோகன் ரெட்டி குழு அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவிற்கு (AICTE) பரிந்துரை செய்துள்ளது.

21. அங்கீகரிக்கப்படாத கல்வி நிறுவனங்களில் பயின்ற மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பாராளுமன்றமானது தேசிய ஆசிரியர் கல்விக் குழும திருத்த மசோதாவை (National Council for Teacher Education (Amenddment Bill, 2018) நிறைவேற்றியது.

22. 2019 ஜனவரி 3 அன்று பாராளுமன்றமானது சிறுவர்களுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை (திருத்த) மசோதா, 2018ஐ நிறைவேற்றியது.

23. 2019 ஜனவரி 3 அன்று பாராளுமன்றமானது தேசிய ஆசிரியர் கல்விக் குழும (திருத்த) மசோதாவை நிறைவேற்றியது.

24. குஜராத்தின் நவ்சாரி மாவட்டத்தில் உள்ள தண்டியில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் தேசிய உப்புச் சத்தியாகிரக நினைவுச் சின்னமானது திறந்து வைக்கப்பட்டது.

25. **பரிக்ஷா பே சார்சா** : 2019 ஜனவரி 29 அன்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுடனான கலந்துரையாடலின் போது பிரதமர் நரேந்திர மோடி தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

26. ஆக்ஸ்போர்டு அகராதியினால் நாரி சக்தி என்ற இந்தி வார்த்தை 2018ஆம் ஆண்டிற்கான இந்தி வார்த்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

27. **பாரத் பர்வ்** : உற்சாகமான தேசப்பற்றை வளர்க்கவும் மற்றும் நாட்டின் கலாச்சார பன்முகத் தன்மையை மேம்படுத்தவும் டெல்லியின் செங்கோட்டையில் பாரத் பர்வ் என்ற திருவிழா நடந்தது.

28. 2019 ஜனவரி 21 அன்று திரிபுரா, மணிப்பூர் மற்றும் மேகாலயா ஆகிய மாநிலங்கள் 47வது மாநில தினத்தைக் கொண்டாடின. 1972 ஜனவரி 21 அன்று இம்மூன்று மாநிலங்களும் முழுமையான மாநிலங்களாக உருவெடுத்தன.

29. செங்கோட்டை வளாகத்தில் பிரதமர் நான்கு அருங்காட்சியகங்களைத் திறந்து வைத்தார். அவை,
- நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அருங்காட்சியகம்
- யாட்-இ-ஜாலியன் அருங்காட்சியகம்
- 1857-இந்தியாவின் முதல் விடுதலைப் போருக்கான அருங்காட்சியகம்
- இந்திய கலைக்கான திரிஷ்யகலா அருங்காட்சியகம்

30. இந்தியாவில் திரைப்பட பாரம்பரியத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன் இந்திய சினிமாவுக்கான தேசிய அருங்காட்சியத்தைப் பிரதமர் நரேந்திர மோடி மும்பையில் தொடங்கி வைத்தார்.

31. சன்ரக்ஷன் க்ஷமதா மகோத்சவ் : இது எதிர்காலத்திற்காக எண்ணெய் மற்றும் எரிவாயு பாதுகாப்பு மற்றும் அதற்கான செய்முறைகளை செய்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

32. திரிபுராவில் காடுகளுக்கான நிலையான நீர்பிடிப்பு மேலாண்மைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

33. **2040ஆம் ஆண்டிற்கான தொலைநோக்குப் பார்வை** : மும்பையில் நடைபெற்ற உலகளாவிய விமானப் போக்குவரத்திற்கான உச்சி மாநாடு 2019-ல் மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் 2040ஆம்

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

ஆண்டிற்கான தொலைநோக்குப் பார்வை திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இதற்கான கருத்தரு : அனைவருக்கும் வான் பயணம்.

34. சமூக நீதி மற்றும் அங்கீகாரமளித்தல் அமைச்சகத்தால் மருந்துகளின் தேவையைக் குறைப்பதற்கான தேசிய செயல்திட்ட வரைவானது (2018-2023) கொண்டு வரப்பட்டது.

35. சீதா ராமா உயர் நீர்பாசன திட்டம் : தெலுங்கானாவில் சீதா ராமா உயர் நீர்பாசன திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் பருவநிலை மாறுபாட்டுக்கான அமைச்சகமானது அனுமதி வழங்கியுள்ளது.

36. புதுச்சேரி அரசானது 2019 மார்ச் 1ம் தேதி முதல் ஒரு முறை மட்டும் உபயோகப்படுத்தப்படும் நெகிழிப் பைகளின் உருவாக்கம், விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவற்றுக்குத் தடை விதித்துள்ளது.

37. புது டெல்லியில் உள்ள நகர்ப்புறப் பகுதிகளில் ஏற்படும் மாசுபாட்டைக் குறைப்பதற்காக மத்திய அரசானது சுத்தமான காற்றிற்கான தேசியத்திட்டத்தை உருவாக்கியுள்ளது.

38. பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு இடஒதுக்கீடு அளிக்கும் 124வது அரசியலமைப்பு திருத்த மசோதாவானது மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

39. ஜார்க்கண்ட் மற்றும் பீகார் மாநிலப் பகுதிகள் பயனடையும் வகையில் வடக்கு கோயல் ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள மண்டல் அணைக்கட்டு திட்டத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.

40. இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 354 A-ன் படி மாற்றுப்பாலினத்தவர்கள் தங்களுக்கு எதிராக நடக்கும் பாலியல் வன்கொடுமைகளுக்கான வழக்கைத் தாக்கல் செய்ய முடியும்.

41. கேரளாவின் திரூர் என்னுமிடத்தில் பாரம்பரிய மொழிகளுக்கான மையம் (Centre for classical Languages) ஒன்றினை அமைக்க மத்திய அரசானது அனுமதி வழங்கியுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

42. பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள பொதுப்பிரிவினருக்கு கல்வி நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்புகளில் 10% இடஒதுக்கீடு வழங்க மத்திய அமைச்சரவையானது அனுமதி வழங்கியுள்ளது.

43. வங்காள தேசம், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு அடைக்கலம் தேடி வந்த இஸ்லாமியர்களைத் தவிர மற்றவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கும் சர்ச்சைக்குரிய மசோதாவான குடியுரிமை திருத்த மசோதா 2019 ஆனது மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

44. கல்வி நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்புகளில் பொதுப் பிரிவில் உள்ள பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்காக 10 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்குவதாக குஜராத் அரசு (இதனை நடைமுறைப்படுத்தும் முதலாவது மாநிலம்) சமீபத்தில் அறிவித்தது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## சர்வதேசம்

1. தனிம வரிசை அட்டவணையை உருவாக்கிய டிமிட்ரி மெண்டலீவின் 150வது பிறந்த நாளை நினைவூட்டும் வகையில் 2019-ம் ஆண்டை தனிம வரிசை அட்டவணைக்கான சர்வதேச ஆண்டாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

2. 2019ம் ஆண்டை உஸ்பெகிஸ்தான் நாடானது திறன் வாய்ந்த முதலீடு மற்றும் சமூக மேம்பாட்டிற்கான ஆண்டாக அறிவித்துள்ளது.

3. பாகிஸ்தான் அரசானது கரும்புச் சாறினை அந்நாட்டின் தேசிய பானமாக அறிவித்துள்ளது.

4. "பஞ்ச் தீர்த்" என்ற இந்து மத புனிதத் தலத்தை பாகிஸ்தான் அதன் தேசிய பாரம்பரிய தலமாக அறிவித்துள்ளது.

5. ஜெய்ர் பால்சானரோ (Jair Bolsonaro) பிரேசில் நாட்டின் புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

6. சுட்செங்ச் சங் (Su Tseng-Chang) என்பவர் தைவானின் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

7. ஸ்டீபன் லோவென் (Stefan Lofven) என்பவர் ஸ்வீடன் நாட்டின் புதிய பிரதமராகத் தேர்தெடுக்கப்பட்டுள்ளார்.

8. ஆண்ட்ரி ராஜெய்லினா (Andry Rajoelina) என்பவர் மடகாஸ்கரின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்,

9. சீனா உலகின் மிக நீளமான முப்பரிமாண - அச்சிடப்பட்ட கான்கிரிட் பாலத்தை வடிவமைத்துள்ளது,

10. இலங்கை அரசானது மத்தலா ராஜபக்ச விமான நிலையத்தின் பராமரிப்புக்காக அடுத்த 40 ஆண்டுகளுக்கு அதன் 70% பங்குகளை இந்தியாவுக்கு வழங்கியுள்ளது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

11. 100 ரூபாய் மதிப்பிற்கு அதிகமான இந்திய ரூபாய் நோட்டுகளை உபயோகிக்க நேபாளத்தின் மத்திய வங்கியானது தடை செய்துள்ளது.

12. ஐக்கிய அமெரிக்கா நாடுகள் மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளும் ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனத்திலிருந்து (UNESCO) அதிகாரப்பூர்வமாக வெளியேறின.

13. மாசிடோனியா நாடானது வடக்கு மாசிடோனியக் குடியரசு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

14. **ஜி.ஏ.எஃப்ஏ வரி** : ஐரோப்பாவில் செய்யப்படும் பெருமளவு வர்த்தகங்களில் உலகளாவிய பெரு நிறுவனங்கள் தங்களது வரிகளை அவர்கள் நியாயமாக செலுத்துவதை உறுதி செய்வதற்காக பிரான்ஸ் நாடானது புதிய GAFA என்ற வரியை அறிமுகப்படுத்தியுள்ளது. GAFA என்பது கூகுள், ஆப்பிள், முகநூல் மற்றும் அமேசான் ஆகிய நிறுவனங்களின் முதல் எழுத்துக்களிலிருந்து சூட்டப்பட்ட பெயராகும்.

15. **பாண்டா பத்திரங்கள்** : சீன மூலதனச் சந்தையிலிருந்து கடன்களைப் பெற பாகிஸ்தான் பாண்டா பத்திரங்கள் என்ற பெயரில் சீன யுவான் பணமதிப்பிலான பத்திரங்களை வெளியிட்டுள்ளது.

16. நீதிபதி ஆசிஃப் சயீத் கோசா (Asif Saeed Khosa) அவர்களை பாகிஸ்தானின் புதிய தலைமை நீதிபதியாக அந்நாட்டின் குடியரசுத் தலைவர் அரிஃப் அல்வி (Arif Alvi) நியமித்துள்ளார்.

17. ஜப்பான் அரசானது சர்வதேச திமிங்கலங்களுக்கான ஆணையத்திலிருந்து (IWC) வெளிவரப்போவதாக அறிவித்துள்ளது. இதனால் ஜப்பானில் வணிகரீதியிலான திமிங்கலங்கள் பிடிக்கும் முறையானது தொடங்கக் கூடும்.

18. கண்பார்வை குறைபாடு உள்ளவர்களுக்கான பிரெய்லி முறையின் முக்கியத்துவத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐ.நா. சபையானது முதன் முறையாக 2019 ஜனவரி 4-ஆம் நாளை உலக பிரெய்லி தினமாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

19. யுனெஸ்கோவால் 2020ஆம் ஆண்டிற்கான உலக கட்டிடக் கலைக்கான தலைநகரமாக பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள்

| மாநாடு / கருத்தரங்கு | நோக்கம் / குறிக்கோள் / வெளிப்பாடு | இடம் | நாள் |
|---|---|---|---|
| **106-வது இந்திய அறிவியல் மாநாடு** | எதிர்கால இந்தியா : அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் | ஜலந்தர், பஞ்சாப் | 2019 ஜனவரி 3-7, |
| **42வது இந்திய சமூக அறிவியல் மாநாடு** | டிஜிட்டல் யுகத்தில் மனிதனின் எதில்காலம் | புவனேஸ்வர், ஒடிசா | 2018 டிசம்பர், 27 |
| **4வது ரைசீனா உரையாடல்** | உலக மறுசீரமைப்பு : புதிய வரைவியல்கள் நிலையற்ற கூட்டணிகள் ; நிச்சயமற்ற விளைவுகள் | புதுடெல்லி | 2019 ஜனவரி, 8 |
| **முதல் உலக விமானப் போக்குவரத்து மாநாடு** | அனைவருக்கும் வான்பயணம் | மும்பை | 2019 ஜனவரி 15-16 |
| **தேசிய இளையோர் பாராளுமன்றத் திருவிழா** | "புதிய இந்தியாவுக்கான குரலாயிரு" மற்றும் "தீர்வுகளைக் கண்டுபிடி மற்றும் கொள்கைக்குப் பங்களிப்பு செய்" | | |
| **9வது சர்வதேச சொட்டு நீர் பாசன கருத்தரங்கு** | நவீன விவசாயத்தில் சொட்டு நீர் பாசனம் | மகாராஷ்டிரா | 2019, ஜனவரி 16 |

## திட்டங்கள் / யோஜனாக்கள்

| திட்டங்கள் | நோக்கம் / செய்திகளில் இடம் பெற்றதன் காரணம் | அமைச்சகம் / துறை | நாள் |
|---|---|---|---|
| **ஒரு குடும்பம் ஒரு வேலைத் திட்டம்** | சிக்கிம் மாநிலத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலையளிப்பதற்காக | சிக்கிம் அரசு | 2019 ஜனவரி 12 |
| **கிரிஷக் பந்து திட்டம்** | மாநிலத்தின் வேளாண் துயரத்தை எதிர்கொள்ள | மேற்கு வங்காள அரசு | 2019, ஜனவரி 1 |
| **அடல் சூரிய கிரிஷி குழாய் திட்டம்** | இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு அரசானது இரண்டு LED பல்புகளும் ஒரு DC மின்விசிறி மற்றும் கைபேசி சார்ஜ் செய்யும் சாக்கெட்டும் இலவசமாக வழங்கப்படும் | மகாராஷ்டிர அரசு | 2019, ஜனவரி 4 |

| | | | |
|---|---|---|---|
| **யுவ ஸ்வபிமான் யோஜனா** | சமூகத்தில் பொருளாதார நிலையில் பின் தங்கியவர்களுக்கும் வேலையற்ற இளைஞர்களுக்கும் வேலையளித்தல் | மத்தியப் பிரதேச அரசு | 2019, ஜனவரி 26 |
| **பிரவாசி ஓய்வூதியத் திட்டம்** | கேரளாவைச் சேர்ந்த ஆனால் வேறு இடங்களில் வசிக்கும் மக்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் : இதில் பயனாளிகள் ஒரு முறை மட்டும் 5 லட்சம் ரூபாய் செலுத்த வேண்டும். | கேரள அரசு | 2019, ஜனவரி 26 |
| **மதுபாபு ஓய்வூதியத் திட்டம்** | மாற்றுத் திறனாளி மற்றும் முதியோர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | ஒடிசா அரசு | 2019, ஜனவரி 21 |

## *ஜனவரி 2019ல் நடைபெற்ற இராணுவப் பயிற்சிகள்*

| இராணுவப் பயிற்சியின் பெயர் | நாடுகள் | பயிற்சியின் வகை | இடம் | நாள் |
|---|---|---|---|---|
| **Sea Vigil** | முதல் கடற்கரையோரப் பாதுகாப்புப் பயிற்சி | கடற்பயிற்சி | கேரளா மற்றும் இலட்சத் தீவுகள் | 2019, ஜனவரி 22 |
| **IMBEX 2018-19** | இந்தியா மற்றும் மியான்மர் | இருதரப்பு இராணுவப் பயிற்சிகள் | ஹரியானா | 2019, ஜனவரி 14 |

## *பாதுகாப்பு மற்றும் விண்வெளி*

1. தொலைதூரம் செல்லக்கூடிய கண்டம் விட்டு விண்ணில் பாயக்கூடிய ஏவுகணையானது (LRSAM) ஒடிசா கடலோரத்தில் போர்க்கப்பலிருந்து வெற்றிகரமான சோதனை செய்து பார்க்கப்பட்டது.
2. சீனாவில் வானூர்தி-இஞ்சின் ஒருங்கிணைப்பு சோதனையில் சீனாவிலேயே தயாரிக்கப்பட்ட டர்பைன் சார்ந்த ஒருங்கிணைந்த சுழற்சி (Turbine - based combined Cycle - TBCC) எந்திரமானது சோதனை செய்து பார்க்கப்பட்டது. இது ஒலியை விட 6 மடங்கு வேகமானது.

3. இஸ்ரோவானது PSLV-C44 ராக்கெட் மூலம் இராணுவ செயற்கைக் கோளான "மைக்ரோசாட் - R" மற்றும் மாணவ செயற்கைக் கோளான 'கலாம்சாட் - V2' ஆகியவற்றை அதற்குரிய சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தியது.
4. INS Kohassa என்ற பெயரில் சிப்பூர் கடற்படை விமானத் தளமானது அந்தமானில் உருவாக்கப்பட்டுள்ளது.
5. இஸ்ரோ, 2019 ஜனவரி 1 அன்று இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் உள்ள இளைஞர்களை அவர்களின் அறிவியல் ஆர்வத்தை வளர்க்கும் நோக்கில் "சம்வாத்" (Sammad with Students) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
6. 2019ஆம் ஆண்டில் 32 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
7. இராணுவ காவலர் பணியில் 20% வேலைவாய்ப்பினை பெண்கள் பெறலாம்.
8. செயற்கையான எரிகல் பொழிவை புவியின் வளிமண்டலத்தில் ஏற்படுத்தக்கூடிய செயற்கைக் கோளானது JAXA-வின் ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.
9. சீனாவின் சாங் இ - 4 (Chang'e - 4) என்ற தரையிறங்கும் & சுற்றும் விண்கலமானது வெற்றிகரமாக நிலவின் சுற்றுவட்டப்பாதையை அடைந்தது. இவ்விண்கலமானது லாங் மார்ச் 3 B என்ற செலுத்துவாகனத்தின் மூலம் செலுத்தப்பட்டது.

## புயல்கள்

| புயல்கள் | பாதிப்பிற்குள்ளான நாடு | நாள் |
|---|---|---|
| பபுக் புயல் | தாய்லாந்து | 2019, ஜனவரி 6 |

## பொருளாதாரம்

1. ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவுதி அரேபியாவின் மத்திய வங்கிகள் ஏபர் (Aber) என்ற புதிய டிஜிட்டல் நாணயத்தை வெளியிட்டுள்ளன.
2. விஜயா வங்கி மற்றம் தேனா வங்கி ஆகிய இரண்டும் பரோடா வங்கியுடன் இணைக்கப்படவுள்ளன.
3. Transparency International வெளியிட்டுள்ள ஊழல் அளவு குறியீட்டில், (Corruption Perception Index) இந்தியா மொத்தமுள்ள 180 இடங்களில்

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

78வது இடத்தைப் பெற்றுள்ளது. டென்மார்க் முதலிடத்திலும் சோமாலியா கடைசி இடத்திலும் உள்ளன.

4. ஜனவரி 14 முதல் 18 வரை அரசு புதிய வகை தங்கப் பத்திரங்களை வெளியிட முடிவு செய்துள்ளது.
5. ESAF சிறுநிதி வங்கியானது (Small Finance Bank) சமீபத்தில் ஆர்.பி.ஐ.யின் அனுமதி பெற்று அட்டவனைபடுத்தப்பட்ட வங்கியானது (Scheduled Bank). இதன் தலைமையகம் திருச்சூர் ஆகும்.

## விருதுகள்

| விருதுகள் / பரிசுகள் | நபர் / நிறுவனம் |
|---|---|
| **2018ஆம் ஆண்டின் ICC பெண் கிரிக்கெட்டர்** | ஸ்மிரிதி மந்தனா |
| **தேசிய நிரித்ய ஷிரோமணி விருது** | அனிந்திதா நியோகி அனாம் |
| **கார்னாட் விருது 2018** | பியூஷ் கோயல் |
| **பாரத ரத்னா 2019** | பிரணாப் முகர்ஜி |
| | நானாஜி தேஷ்முக் (மறைவுக்குப்பின் |
| | பாடகர் பூபன் ஹசாரிகா (மறைவுக்குப் பின்) |
| **ஸ்வச் பாரத் யாத்ராவுக்கான விருதுகள்** | சிறந்த மாநிலம் : தமிழ்நாடு<br>மூன்று கோடிக்கு மேல் மக்கள் தொகை கொண்ட சிறந்த மாநிலங்கள்:<br>குஜராத், மத்தியபிரதேசம், உத்திரப்பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரம் |
| | மூன்று கோடிக்கு கீழ் மக்கள் தொகை கொண்ட சிறந்த மாநிலங்கள்:<br>பஞ்சாப், கோவா மற்றும் டெல்லி |
| | சிறப்பு விருதுகள்: மேகாலயா, ஜம்மு காஷ்மீர் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களுக்கு அவற்றின் மோசமான கரடுமுரடான மலைப்பகுதிகளைப் பொருட்படுத்தாமல் பங்கேற்றதற்கான சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. |
| | லான்ஸ் நாயக் நாசிர்வானி (மறைவுக்கு பின்) |
| | பங்காரு அடிகள் - மேல்மருவத்தூர் கோவிலை உருவாக்கியவர். |

SHANKAR IAS ACADEMY CURRENT AFFAIRS

| | |
|---|---|
| **அசோக சக்கர விருது**<br>**பத்ம ஸ்ரீ விருதுகள் 2019 - தமிழ்நாடு** | ஷரத் கமல் - டேபிள் டென்னிஸ் வீரர் |
| | நர்த்தகி நட்ராஜ் - மாற்றுப் பாலினத்தைச் சேர்ந்த பரதநாட்டிய கலைஞர் |
| | மதுரை சின்னப்பிள்ளை - சமூக சேவகி |
| | R.V.ரமணி - சங்கரா கண் அறக்கட்டளையை நிறுவியவர் |
| | ஆனந்தன் சிவமணி - இசைக் கலைஞர் |
| | ராமசாமி வெங்கடஸ்வாமி - மருத்துவர் |
| **பத்ம ஸ்ரீ விருதுகள் - 2019**<br>**கர்நாடகா** | பிரபுதேவா |
| **பத்மஸ்ரீ விருதுகள் 2019 - விளையாட்டு** | பச்சேந்திரி பால் - பத்ம பூசன் விருது<br>சுனில் சேத்ரி<br>ஹறிகா துரோணவள்ளி<br>கௌதம் கம்பீர்<br>ஷரத் கமல்<br>பாம்பேலா தேவி லைஷ்ராம்<br>பஜ்ரங் புனியா<br>பிரசாந்தி சிங்<br>அஜய் தாகூர் |
| **பிரவாசி பாரதிய சம்மன் விருது - 2019** | கீதா கோபிநாத் |
| **ஐசிசி விருதுகள் 2018** | இந்த ஆண்டிற்கான ஐசிசி கிரிக்கெட்டர் சர் கர்ஃபீல்டு சோபர்ஸ் கோப்பை : விராட் கோலி |
| | ஐசிசியின் இந்த ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீர : விராட் கோலி |
| | ஐசிசியின் இந்த ஆண்டின் ஒருநாள் போட்டியின் சிறந்த கிரிக்கெட் வீரர் : விராட் கோலி |
| | ஐசிசியின் இந்த ஆண்டின் வளர்ந்துவரும் வீரர் : ரிஷப் பந்த் |
| | ஐசிசியின் இந்த ஆண்டின் இணை வீரர் : கேலம் மக்லேட் |
| | T20 யின் சிறந்த ஆட்டக்காரார் : ஆரன் பிஞ்ச் |

| | |
|---|---|
| | ஐசிசியின் சிறந்த ஊக்கமளிக்கும் வீரர் விருது : வில்லியம்சன் |
| | சிறந்த நடுவர் : குமார் தர்மசேனா |
| | ரசிகர்களுக்கான சிறந்த தருணம் : 19 வயதிற்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை போட்டியில் இந்திய அணி கோப்பையை வென்ற தருணம். |
| **சிறந்த குரல் - பெண்களுக்கான விருது** | ரஞ்சனி முரளி |
| **சர்வதேச காந்தி அமைதி விருது** | 2015 - கன்னியாகுமரியின் விவேகானந்த கேந்திரா |
| | 2016 - அட்சயபாத்திரா அறக்கட்டளை மற்றும் சுலாப் இண்டர்நேஷனல் |
| | 2017 - ஏகல்அபியான அறக்கட்டளை |
| | 2018 - யோகேய் சசாகாவா |
| **பிலிப் கோட்லர் பிரசிடென்ஷியல் விருது** | பிரதமர் நரேந்திர மோடி |
| **சுசிலா தேவி இலக்கிய விருது** | நமிதா கோகலே |
| **ISRS தேசிய சிறந்த புவிசார் விருது - 2017** | ஜெயந்தகுமார் கோஷ் |
| **2017ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாடமியின் பிரேம்சந்த் தோழமை விருது** | ஜயாதுரை சாந்தன் |

## *நியமனங்கள் மற்றும் ஆளுமைகள்*

| நபர்கள் | பொறுப்பு / பதவி |
|---|---|
| **சுதிர் பார்கவா** | தலைமை தகவல் ஆணையர் |
| **நீதிபதி ஏகே சிக்ரி** | தேசிய சட்டசேவைகள் ஆணையத்தின் (NALSA) நிர்வாகத் தலைவர் |
| **புனித் கோயங்கா** | BARC இந்தியாவின் தலைவர் |
| **சஞ்ஜய் ஜெயின் மற்றும் K.M நட்ராஜ்** | கூடுதல் இந்திய சொலிசிடர் ஜெனரல் |
| **பிரணவ் ஆர் மேத்தா** | உலக சூரியஒளி மின்சக்தி சபையின் தலைவர் |
| **வினோத் குமார் யாதவ்** | இரயில்வே வாரியத்தின் தலைவர் |
| **சவுரப் குமார்** | போர்த்தளவாடங்கள் தொழிற்சாலை வாரியத்தின் தலைவர் |

Group I Mock Test on 24th February 2019 at 27 Centres across the state
Group II (OT) / II A Test Batch starts on 11th March 2019
Exclusive Language Test Batch starts on 17th March 2019
www.shankariasacademy.com www.tnpscthervupettagam.com

## விளையாட்டு

1. மசாரப் முர்தசா - நய்முர் ரஹ்மான் துர்ஜாய்க்கு அடுத்ததாக தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கும் இரண்டாவது கிரிக்கெட் வீரர் மசாரப் முர்தசா ஆவார். இவர் “நரெயில் எக்பிரஸ்” என்று பிரபலமாக அழைக்கப்படுகிறார்.

2. மேக்னஸ் கார்ல்சென் உலக பிளிட்ஸ் சதுரங்க பட்டத்தை தக்கவைத்துக் கொண்டார்.

3. இந்தோனேசிய மாஸ்டர்ஸ் பாட்மிட்டன் போட்டி 2019.
   - பெண்கள் ஒற்றையர் பிரிவு : சாய்னா நேவால் (இந்தியா)
   - ஆண்கள் ஒற்றையர் பிரிவு : ஆண்டர்ஸ் ஆன்டோன்சென் (டென்மார்க்)
   - பெண்கள் இரட்டையர் பிரிவு : மிசாகி மட்சுடோமா மற்றும் அயகா தகாஹாஷி (ஜப்பான்)
   - ஆண்கள் இரட்டையர் பிரிவு : மார்கஸ் ஃபெர்னால்டி கிடியன் மற்றும் கெவின் சஞ்சயா கொமுல்ஜோ (இந்தோனேசியா)
   - கலப்பு இரட்டையர் பிரிவு : செங் சிவை மற்றும் ஹுவாங் யாகியோங் (சீனா)

4. ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் (ஹேப்பி ஸ்லாம் என்ற புனைப் பெயரால் அழைக்கப்படுகிறது): 2019

   (ஜனவரி 7 முதல் - 28 வரை, மெல்பர்ன், விக்டோரியா, ஆஸ்திரேலியா)

| ஆடவர் ஒற்றையர் பிரிவு | நோவாக் ஜோகோவிச் (செர்பியா) (வெற்றி)<br>எதிர்<br>ரஃபேல் நடால் (ஸ்பெயின்) |
|---|---|
| பெண்கள் ஒற்றையர் பிரிவு | நவோமி ஒசாகா (ஜப்பான்) (வெற்றி)<br>எதிர்<br>பெத்ரா கிவிதோவா (செக் குடியரசு) |
| ஆடவர் இரட்டையர் பிரிவு | பியேர் ஹியூக்ஸ் ஹெர்பொட் மற்றும் நிக்கோலஸ் மகுட் (பிரான்ஸ்) (வெற்றி)<br>எதிர்<br>ஹென்றி கோன்டினென் (பின்லாந்து) மற்றும் ஜான் பீர்ஸ் (ஆஸ்திரேலியா) |
| பெண்கள் இரட்டையர் பிரிவு | சமந்தா ஸ்டோசர் (ஆஸ்திரேலியா) மற்றும் சுகாங் சுவாய் (சீனா) (வெற்றி)<br>எதிர்<br>திமியா பாபோஸ் (ஹங்கேரி) மற்றும் கிறிஸ்டினா ம்லாடெனோவிப் (பிரான்ஸ்) |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

5. சத்யரூப் சித்தாந்தா என்ற 35 வயதுடையவர், கொல்கத்தாவைச் சேர்ந்த மலையேறும் வீரர். இவர் 7 வருடங்களில் 7 கண்டங்களிலுள்ள 7 மலைகள் மற்றும் 7 பெரிய எரிமலைகளை ஏறிய இளம் வீரர் என்ற உலக சாதனையைப் படைத்துள்ளார்.

## திருவிழாக்கள்

1. **ஆதிவாசி மேளா - 2019** : வருடத்திற்கு ஒரு முறை நடக்கும் ஆதிவாசி மேளாவின் 2019ஆம் ஆண்டு விழாவில் குறிப்பாக எளிதில் பாதிக்கப்படகூடிய பழங்குடியினர் குழுக்களின் (PVTG) நலனுக்காக ஜிபன் சம்பர்க் என்ற திட்டத்தை ஒடிசா முதல்வர் தொடங்கி வைத்தார்.
2. **சமஸ்கிருத கும்பம்** : உத்திர பிரதேசத்தின் ஆளுநர் ஸ்ரீராம் நாயக் பிரயாக்ராஜில் சமஸ்கிருத கும்பத்தை துவங்கி வைத்தார்.
3. **இரண்டாவது உலக ஆரஞ்சுத் திருவிழா** : 2019 ஜனவரி 29 முதல் 21 வரை மகாராஷ்டிராவானது இரண்டாவது ஆரஞ்சுத் திருவிழாவைக் கொண்டிடாடியது.
4. **பக்கே பாகா இருவாச்சித் திருவிழா** : அருணாச்சல பிரதேச அரசு பக்கே பாகா இருவாச்சித் திருவிழாவை (Hornbill Festival) மாநில திருவிழாவாக அறிவித்துள்ளது.

## முக்கிய நாட்கள்

| நாட்கள் | நிகழ்வுகள் | கருத்துரு / முக்கியத்துவம் |
|---|---|---|
| **ஜனவரி 1** | சர்வதேச குடும்ப தினம் | அமைதிக்காக ஒருநாள் |
| **ஜனவரி 4** | முதலாவது உலக பிரெய்லி தினம் | பிரெய்லியின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் |
| **ஜனவரி 5** | தேசிய பறவைகள் தினம் | |
| **ஜனவரி 9** | பிரவாசி பாரதிய திவாஸ் | புதிய இந்தியாவை உருவாக்குவதில் புலம்பெயர்ந்தவர்களின் பங்கு |
| **ஜனவரி 10** | உலக இந்தி தினம் | இந்தி மொழியைப் பற்றிய விழிப்புணர்வை உலகம் முழுவதும் ஏற்படுத்துதல் மற்றும் இந்தியை சர்வதேச மொழியாக மாற்றுதல். |
| **ஜனவரி 12** | உலக இளைஞர்கள் தினம் | சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாளை நினைவூட்டும் விதமாக அனுசரிக்கப்படுகிறது. |
| **ஜனவரி 15** | இராணுவ தினம் | நாட்டையும் நாட்டு மக்களின் வாழ்க்கையையும் பாதுகாக்க உயிர் நீத்த இராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக அனுசரிக்கப்படுகிறது. |
| **ஜனவரி 24** | முதல் சர்வதேச கல்வி நாள் | வளர்ச்சியில் கல்வியின் பங்கை கொண்டாடும் விதமாக அனுசரிக்கப்படுகிறது. |
| | தேசிய பெண்குழந்தைகள் | குழந்தைகளின் பாலின விகிதம் பற்றிய |

| | | |
|---|---|---|
| | தினம் | விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் பெண் குழந்தைகளுக்கு அதிகாரமளித்தல். |
| **ஜனவரி 25** | தேசிய வாக்காளர்கள் தினம் | வாக்களிப்பதை ஊக்குவித்தல், வாக்களிப்போரின் எண்ணிக்கையை (குறிப்பாக புதிய வாக்காளர்கள்) அதிகரித்தல். |
| | தேசிய சுற்றுலா தினம் | |
| **ஜனவரி 26** | சர்வதேச சுங்க நாள் | |
| **ஜனவரி 30** | தியாகிகள் தினம் | இந்தியாவிற்காக தனது வாழ்வை அர்ப்பணித்த தியாகிகளை கௌரவிக்கும் விதமாக இந்நாள் கொண்டாடப்படுகிறது. |
| | உலக தொழுநோய் ஒழிப்பு தினம் | |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS